**OS. 69/2021**

**நாள். 24.03.2026**

**பி.வா.சா. 1 – செய்யதுஅமீனுதீன்**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

வாதிகள் தாவா வழக்கை பாகம் கேட்டு 2021ம் ஆண்டு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். தாவா வழக்கு நிலுவையில் இருக்கும்போது சர்வே எண்.151/2ல் கண்ட மொத்த சொத்தில் 1, 3, 4 பிரதிவாதிகள் பாகம் பிரியாத மொத்த சொத்தில் முத்து கருங்கு என்பவருக்கு 30.08.2023ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தில் வாதிகள், பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் எங்கள் பங்கை மட்டும் கிரையம் கொடுத்துள்ளோம். பாகம் பிரிக்கப்படாத சொத்தில் நீங்கலாக நான்குமால்களை குறிப்பிட்டு கிரையம் கொடுத்தது செல்லத்தக்கதல்ல என்றும், அந்த ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. சர்வே எண்.174/1சி ல் கண்ட சொத்தானது எங்கள் தாயார் சூரத்பல்கிஸ் பெயரில் இருந்து வரும் சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தை என் தாயார் உடல்நிலை சரியில்லாத நிலையிலும், சுயநினைவு இல்லாத நிலையிலும் அவரின் பெண்மக்களுக்கு இனாம்செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அந்த இனாம் ஆவணத்தின் அடிப்படையில் பெண்மக்கள் சொத்துக்களை பாத்தியமடைந்து அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.51/2 அரண்மனை தோட்டம் என்றால் சரிதான். என் தாயார் சூரத்பல்கிஸ் எனக்கு ஒரு பொதுஅதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பொதுஅதிகார ஆவணத்தின் அடிப்படையில் சர்வே எண்.51/2ல் கண்ட சொத்தை 6ம் பிரதிவாதிக்கு அடமானம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் மருத்துவ

செலவுக்காக ரூ.60 ஆயிரத்திற்கு அடமானம் எழுதி கொடுத்தேன். என் தாயாரின் மருத்துவ செலவுகளை நான் மட்டும் பார்க்கவில்லை என்றும், வாதிகளும் சேர்ந்து பார்த்தார்கள் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானம் இன்றுவரை திருப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அந்த அடமானகடனை வாதிகள் உட்பட என் தாயாரின் இதர வாரிசுகள் திருப்புவதற்கு உரிமையுள்ளது என்றால் சரிதான். அந்த அடமானத்தை திருப்பினால் என் தாயாரின் அனைத்து வாரிசுகளுக்கும் பங்குண்டு என்றால் சரிதான். சர்வே எண்.152/3ல் கண்ட சொத்து என் தகப்பனார் அப்துல் ரகீமுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்து பாகம் பிரிக்கப்படாமல் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதை பாகம் பிரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். சர்வே எண்.615/1ல் கண்ட சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் பொதுஅனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல, வாதிகள் அப்துல்சமது மற்றும் உமர்கையூம்சுல்தான் ஆகிய இருவரும் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள். நான் சொல்வது தவறு என்றும், பொது அனுபவத்தில் இருந்து வருவதால்தான் வாதிகள் அந்த சொத்தையும் பாகம் கேட்கிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.174/2R1ல் கண்ட சொத்தை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து 3ம் நபருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. என் தாயார் சூரத் பல்கிஸ் ஆங்கிலத்திலும், தமிழிலும் கையெழுத்து செய்வார் என்றால் ஆங்கிலத்தில் எப்போதும் கையெழுத்து செய்யமாட்டார். என் தாயார் என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. என் தாயார் சூரத்பல்கிஸ் பெண்மக்களுக்கு எழுதிக்கொடுத்த இனாம்ஆவணத்தில் கைரேகை மட்டுமே வைத்துள்ளார் என்றால், என் தாயாரின் உடல்நிலை சரியில்லாததால் கைரேகை வைத்துள்ளார். என் தாயார் எழுதிக்கொடுத்த இனாம் ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் அவருக்கு என்னவென்றே தெரியாமல் ஏமாற்றி கைரேகை வாங்கி பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்

வாதிகள் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கிரையப்பத்திரத்தின் இணைய நகல் முத்துக்கருங்கு என்பவருக்கு 1, 3, 4 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணம் நகல் **வா.சா.ஆ.5**.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.